[2015 ஆகஸ்ட் 25

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் சுமார் 30 ஆண்டுகாலமாக N.M.R. பணியாளர்கள் தினக்கூலிகளாகப் போராடி வந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கருணையால் 114 குடும்பங்களுடைய 30 ஆண்டுகால போராட்டத்திற்கு விடிவு வந்தது. அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

மேம்பாலம்

***47628 திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையிலுள்ள நான்கு மாசி வீதிகளிலும் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சூதுமதியாளர்களை, சூழ்ச்சிகளை வேரறுத்து, தடைகளைத் துணிவோடு சந்தித்து, நீதியை நிலைநாட்டி, ஐந்தாவது முறையாகத் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களை என்றும் காக்கும்

2015 ஆகஸ்ட் 25]

காவல் தெய்வமே! எதிரிகளை மண்ணோடு மண்ணாக்கி, எதிர்க்கட்சிகளே இல்லாத நிலையாக்கி, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் இடைத்தேர்தலிலே மாண்புமிகு அம்மா அவர்கள் ஒன்றரை இலட்சம் வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக வரலாற்றில் மகத்தான சாதனை வெற்றி பெற்றார்கள். இந்த கின்னஸ் சாதனை வெற்றி, தமிழக மக்கள் அனைவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பக்கம் என்பதற்கு அத்தாட்சி. தமிழகத்தில் இனிவரும் காலமெல்லாம் மாண்புமிகு அம்மாவின் ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, வினாவிற்கு விடையளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலுள்ள நான்கு மாசி வீதிகளிலும் மேம்பாலம் அமைக்கும் உத்தேசம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலை மக்கள் அன்றாடம் சந்தித்து வருகிறார்கள். தற்போதுகூட வைகை ஆற்றில் தெற்கு, வடக்கை இணைக்கக்கூடிய இரண்டு பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், விக்டர் மேம்பாலத்திலிருந்து அண்ணா சிலை அருகில் துவங்கி பெரியார் பேருந்து நிலையம் வரையிலும் மேம்பாலம் அமைப்பதற்கு நிலம் எடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணியையும் விரைந்து முடிக்க வேண்டுகின்றேன். அதேநேரத்தில், மதுரை ஒரு பழமையான நகரம். நான்கு மாசி வீதிகள், நான்கு வெளி வீதிகள் என்ற கட்டமைப்பு உள்ளது. அங்கு சாலைகளை அகலப்படுத்துவதற்கான வாய்ப்பே இல்லை. இந்த நான்கு மாசி வீதி, வெளி வீதிப் பகுதிகளில்தான் வர்த்தகமும், அதேபோல, மீனாட்சி அம்மன் கோயிலும் இருந்து வருகிறது. தினசரி பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று வருகிறார்கள். எனவே, இந்தப் பகுதியின் நெருக்கடியைப் போக்க, நான்கு மாசி வீதிகள்

அல்லது நான்கு வெளி வீதிகளில் குறிப்பாக முக்கிய சந்திப்பான கீழவாசல், செயின்ட் மேரீஸ், தெற்கு வாசல் போன்ற இடங்களில் மேம்பாலம் அமைத்து போக்குவரத்து நெரிசலைப் போக்குவதற்கு அரசு முன்வருமா என்பதோடு, அதேபோல, மதுரையில் பெரும்பாலான சாலைகள் சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. அதற்காக, மதுரை மாநகராட்சி நிருவாகத்தினர் தமிழக அரசிடம் ரூ.55 கோடி ரூபாய் நிதியைக் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மதுரை மாநகராட்சிக்கு தமிழக அரசுமூலம் ரூ.250 கோடி சிறப்பு நிதியாக வழங்கப்பட்டதைப்போல, இப்போது தமிழக அரசு, சாலைகளைச் சீரமைக்க ரூ.55 கோடி நிதியை வழங்குமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே தமிழகத்தில் பாலங்கள் அமைக்க ரூ.162 கோடி நிதி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதிலும் பேரூராட்சிப் பகுதிகளில் பாலங்கள் அமைக்க ஒரு ரூபாய் கூட நிதியாக ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க பொற்கால ஆட்சியில் பாலங்கள் அமைக்க, சென்னை மாநகராட்சிப் பகுதியில் ரூ.97 கோடியே 59 இலட்சம் நிதியும், சென்னையைத் தவிர்த்து, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் ரூ.72 கோடியே 80 இலட்சம் நிதியும், பேரூராட்சிப் பகுதிகளில் ரூ.28 கோடியே 44 இலட்சம் நிதியும், ஊரகப் பகுதிகளில் ரூ.353 கோடியே 16 இலட்சம் நிதியும் என ஆகமொத்தம் ரூ.552 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சரித்திர சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைக்காட்டிலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ரூ.390 கோடி அளவிற்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2015 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் உள்ள நான்கு மாசி வீதிகளிலும் மேம்பாலங்கள் அமைக்கப் போதுமான அளவில் சாலைகள் அகலமாக இல்லை. தற்போது இச்சாலைகளில் வாகனப் போக்குவரத்து வசதியைக் கருத்தில்கொண்டு, அச்சாலைகள் ஒருவழிப் பாதைகளாக மாற்றப்பட்டுள்ளன. மேலும், மதுரையின் பாரம்பரியத் திருவிழாவான சித்திரைத் திருவிழாவின்போது, இப்பகுதிகளில்தான் ஆண்டுதோறும் தேரோட்டம் நடைபெறுகிறது. எனவே நான்கு மாசி வீதிகளிலும் மேம்பாலம் அமைக்க இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாநகராட்சிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.250 கோடி நிதி ஒதுக்கியதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கோடிட்டுக் காண்பித்தார்கள். இப்பொழுது அங்கு இருக்கக்கூடிய சாலைகளில் எல்லாம் வேலை செய்யப்பட்டதால் பாதாள சாக்கடை பழுதடைந்துள்ளது என்பதை தெரிவித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை சாலைகளும் கண்டிப்பாகச் சீரமைக்கப்பட்டு வருகின்றன. கண்டிப்பாக அந்தச் சாலையையும் சீரமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசி வீதி என்பதனாலேதான் நான் வெளி வீதியைக் குறிப்பிட்டு, சில குறிப்பிட்ட இடங்களைச் சுட்டிக் காண்பித்து அங்கே பாலங்கள் அமைக்கப்பட்டால், போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்று சொன்னேன். அதுபோல, மதுரை நகரம், மதுரை மாவட்டத்தில் இருக்கும் ஒட்டுமொத்த போக்குவரத்து நெருக்கடியைப் போக்குவதற்கு திருப்புவனத்திலே தொடங்கி, திருமங்கலம், திருப்பரங்குன்றம், சோழவந்தான், அலங்காநல்லூர், அழகர்கோவில், மேலூர், பூவந்தி என மதுரையைச் சுற்றியுள்ளப் பகுதிகளில், ஒன்று மின்சார இரயில்

பாதை வசதி செய்வது அல்லது நம்முடைய சென்னையைப் போன்று மெட்ரோ இரயில் அமைப்பதற்கான ஏற்பாடு செய்வது என்ற அடிப்படையில் மத்திய அரசாங்கத்திடம் அனுமதியைப் பெற்றால் ஒட்டுமொத்தமாக மதுரை மாநகரம், மதுரை மாவட்டத்தில் இருக்கும் போக்குவரத்து நெரிசலைப் போக்குவதற்கு ஒரு பெரிய வாய்ப்பை உருவாக்கமுடியும். எனவே, தமிழக அரசு மத்திய அரசிடம் இதற்கான அனுமதியைப் பெற்று மதுரை மாநகர், மதுரை மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்த போக்குவரத்து நெருக்கடியைப் போக்குவதற்கு மின்சார இரயில் பாதை அல்லது மெட்ரோ இரயில் பாதை அமைப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் மொத்தம் 5 தரைமட்டப் பாலங்களும், 10 உயர்மட்டப் பாலங்களும் உள்ளன. தற்போது அருள்தாசபுரம் மற்றும் சிம்மக்கல் பகுதிகளில் உள்ள தரைமட்டப் பாலங்கள் அபிவிருத்தி மற்றும் அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ் ரூ.30 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், குருவிக்காரன் சாலை மற்றும் ஓபுளாப்படித்துறை பகுதிகளிலுள்ள தரைமட்டப் பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றியமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இது தவிர, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி கோரிப்பாளையம் மற்றும் காலவாசல் பகுதிகளில் உயர்மட்ட மேம்பாலங்கள் அமைக்க நெடுஞ்சாலைத் துறையின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், மதுரை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அப்பல்லோ மருத்துவமனை மற்றும் ஜவகர் மருத்துவமனை சந்திப்பில் உயர்மட்டப் பாலங்கள் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மற்ற கோரிக்கைகள் எல்லாம் வேறு துறையின்கீழ் கேட்டார்கள்.

2015 ஆகஸ்ட் 25]

அவற்றிற்கு தனிக் கேள்வி போடவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வி.எஸ். விஜய், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***50751—டாக்டர் வி.எஸ். விஜய்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *வேலூர் தொகுதி, கன்சால்பேட்டையிலுள்ள கால்நடை மருத்துவமனையைக் கால்நடை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) *மற்றும்* (ஆ) *வேலூர் தொகுதி, கன்சால்பேட்டைப் பகுதியில் செயல்பட்டு வருகின்ற கால்நடை மருத்துவமனையைப் பன்முக மருத்துவமனையாக மாற்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். ஒரு கால்நடை மருத்துவமனையைப் பன்முக மருத்துவமனையாக மாற்ற வேண்டுமென்று சொன்னால், பல்வேறு விதிமுறைகள் உள்ளன. அந்த மருத்துவமனையைத் துறை ஆய்வு செய்தபோது, அந்த விதிமுறைகளெல்லாம் சரியாக இருக்கின்றன. கால்நடைகளுக்கும் கருணை மனதோடு பல்வேறு திட்டங்களை அளித்து வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய* (மேசையைத் தட்டும் ஒலி) *கவனத்திற்கு இதை எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*